# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- நந்தன வருடம் ஐப்பசி அ உ வெள்ளிக்கிழமை (24 Octo. 1952) [இல - ருஉ]


உ

## தொண்டரை உள்ளங் கொண்டார்

திருச்சிற்றம்பலம்.

நீரின்பவெள்ளத்து நீந்திக்குளிக்கின்ற
நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரிமேற்
கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை யுள்ளங் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழலே
சென்று பேணுமினே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருநாள்

## மாசற்ற மனத்தில் ஆலயம் அமைத்த அடியார்

### பூசலார் திருநாள் 22-10-52

தொண்டைமண்டலத்திலே திருநின்றவூரிலே, அந்தணர் குலத்திலே பூசலார் நாயனார் திருவவதாரஞ் செய்தார். அவர் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தலே சீரியதெனக்கொண்டு, அவர்கள் வேண்டுவனவற்றை எவ்வாற்றானும் தேடிக் கொடுத்து வந்தார். பொருளின்மையையுங் கருதாது சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயில் அமைத்தற்கு விரும்பினார்.

"அடுப்பது சிவன்பால் அன்பர்க்
காமபணி செய்தல்'' என்றே
கொடுப்பதெவ் வகையுந்தேடி
அவர்கொளக்கொடுத்துங்கங்கை
மடுப்பொதி வேணி ஐயர்
மகிழ்ந்துறைவதற்கோர்கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
இருநிதி இன்மை எண்ணார்

வேண்டிய பொருளைத் தேட முயன்றும் சித்தி பெய்தாது மனம்வருந்தி, மனத்தினாலே திருக்கோயிலமைக்கத் துணிந்து இரவில் நித்திரையுமின்றி வேண்டுவன செய்து திருக்கோயிலமைத்துப் பிரதிட்டை செய்தற்குத் தகுந்த நாளை எதிர்பார்த்திருந்தார்.

தாபியும் நட்டு மிக்க சுதையுநல்
வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு
கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்க
விதித்தநாள் சாரு நாளில்.

இக்காலத்திலே காஞ்சிபுரத்திலே காடவராசா ஒரு திருக்கோயிலமைப்பித்தார். அதற்குக் குறித்த பிரதிட்டை நாளுக்கு முதல்நாள் சிவபெருமான் அரசனுக்குக் கனவிலே தோன்றி நாளைக்கு பூசலென்பவன் அமைத்த கோயிலுக்குப் போவோம். உன் கோயிலின் பிரதிட்டையை நாளையொழித்து செய் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அரசன் விழித்தெழுந்து திருநின்றவூரையடைந்து பூசலார் நாயனார் கட்டிய கோயிலைத் தேடியபொழுது அவ்வாறு ஒரு கோயிலை அவர் கட்டவில்லையென்று சொன்னார்கள். அப்பொழுது அரசன் பூசலார் நாயனாரை அடைந்து தொழுது நீர் இன்று பிரதிட்டை செய்யவிருக்கின்ற கோயிலெங்கே என்று கேட்டார். என்னையும் ஒரு பொருளாகக்கொண்டு எம்பிரான் இவ்வாறு கூறியருளினர் என்று நினைந்து நடந்ததைத் தெரிவித்தார் நாயனார்.

அரசன் அதைக்கேட்டு அதிசயித்து நாயனாருடைய அன்பின் பெருமையை நினைந்து அவரை நிலத்திலே வீழ்ந்து வணங்கித் தனது ஊருக்குத் திரும்பினர்.

அரசனும் அதனைக் கேட்டங்
கதிசயம் எய்தி "என்னே!
புரையறு சிந்தை அன்பர்
பெருமை!''என்றவரைப்போற்றி
விரைசேறி மாலை தாழ
நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு
மீண்டுதன் மூதூர்ப் புக்கான்.

நாயனார் தாம் அமைத்த திருக்கோயிலைப் பிரதிட்டை செய்து பலகாலம் பூசை செய்திருந்து சிவபெருமானுடைய திருவடிநீழலை யடைந்தார்.

அன்பரும் அமைத்த சிந்தை
ஆலயத் தானர் தம்மை
நன்பெரும் பொழுது சாரத்
தாபித்து நலத்தி னேடும்
பின்புபூ சனைக ளெல்லாம்
பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்றுளாடும்
பொற்கழல் நீழல் புக்கார்.

கழுத்துறை

### கதிர்காமத் தொண்டர்சபை

மேற்படி சபையின் ஒன்பதாம் ஆண்டுவிழாவும் ஸ்ரீ கதிர்காம வேலாயுதசுவாமி கோயில் அத்திவாரக்கல் இடும் விழாவும் நிகழும் நந்தன வருடம் ஐப்பசி மாதம் 14-ந் திகதி (30-10-52) வியாழக்கிழமை நடைபெறுமெனச் சபைக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

அன்று சேர். கந்தையா வைத்தியநாதனவர்கள் தலைமையில் ஒரு பகிரங்கக்கூட்டமும் நடைபெறும்.

### ஆசை அறுமின்கள்

ஆசை அதிகரிக்கவே பொய் முதலிய பாவங்கள் மலிகின்றன. ஆசை நீங்காவிட்டால் உலகம் முன்னேற முடியாது. நாங்கள் மிருகங்களைப்போல வாழமுடியாது. நாம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து ஒற்றுமையாய் வாழாவிடில் நாம் அழிவெய்துவோம்,

கடவுளே எமக்குத் தலைவரும் தாய்தந்தையருமா யிருக்கின்றாரென்பதை நாம் மறக்கக்கூடாது. கடவுளில்லை என்று கூறுகிறவர்களும் எங்கள் மத்தியிலிருக்கிறார்களே என்பது வருந்தவேண்டியது என்று ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் திங்கட்கிழமை 20-10-52 திருப்பதியில் தண்ணீர் விநியோக அமைப்பைத் திறந்து வைத்துப் பேசும்பொழுது கூறினர்.

### தமிழ் — சிங்கள தந்திகள்

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, குருணாக்கல் ஆகிய தபால்—தந்தி நிலையங்களுக்கிடையே சனிக்கிழமை 25-10-52 தொடக்கம் தந்திப் போக்குவரத்து தமிழ் சிங்கள மொழிகளில் நடைபெறும். இவ்விடங்களிற்பெறும் அநுபவத்தைக்கொண்டு வேண்டிய திருத்தங்கள் செய்து காலகதியில இவ்வசதி ஏனைய இடங்களிலும் அமைக்கப்பெறும்.

### நாலு வயதுப் பிள்ளையின் வேத உபநிடத சுலோகங்கள்

நாலு வயதினதாகிய மைசூர்ப்பிள்ளையொன்று தலயாத்திரை செய்யும்பொழுது அந்தந்தத் தலத்துக்குப் பொருத்தமான வேத உபநிடத சுலோகங்களை உச்சரித்துப் பெரும் அதிசயத்தை விளைக்கின்றதாம். பாலுணவுடன் நாலு மணிநேர நித்திரை செய்து மிகுதி நேரத்தில் இவைகளைச் செய்கின்றதாம்.

அரசியல் அலை

## மக்கள் ஆட்சி முறையிற் பலதிறம்

### எது பொருத்தமானது? ஆர் தீர்மானிப்பது?

**முடியாட்சி போய்க் குடியாட்சி வந்துவிட்டாற் போதாது மக்கள் ஆட்சியிலும் பலவேறு வகையுண்டு. எதுசரி என்று தீர்மானிப்பதிலேயே அரசியல் வாதிகளின் காலம் போய்க் கொண்டிருக்கிறது.**

இடதுசாரிகள் தங்கள் முறையைப் பாராட்டுகின்றனர். திரு பண்டாரநாயக தனது விடுதலைக் கட்சியே பூரண சனநாயக முறையை நடத்தி வைக்கும் என்று வீரவாக்குப் பொழிகின்றார். ஐக்கிய தேசியக்கட்சியார் மக்கள் பிரதிநிதிகள் தாங்களே என்று வாய்ப்பறை சாற்றுகின்றனர். இதற்கிடையிலே அல்லற்படுகின்றவர்கள் குடிசனங்களே.

ஒருநாட்டைச் செவ்வனே பரிபாலனஞ் செய்யவேண்டுமேயானால் வறுமை பிணி ஆதியனவற்றை நீக்கி, ஒவ்வொருவரும் உழைத்துண்ணக்கூடிய வசதிகளை ஆக்கிவிடக்கூடிய ஒழுங்குகளைச் செய்வதையே அரசாங்கம் முதற்கண் நோக்கவேண்டும். இதிலே கட்சிகளுக்கு வேறுபாடுகளிருப்பதாகத் தெரியவில்லை. பின் எவ்வகையில் அபிப்பிராயபேதம் என்றால், இங்கிலாந்து அமெரிக்கா நாடுகளா? அன்றி ருசியா, சீனா தேசங்களா? இலங்கையின் நண்பர்களாகவேண்டும என்பதே. இந்நாட்டிற்கு யாவரும் கேளிராயிருத்தலையே பொதுசனம் விரும்பும் என்பதைக் கட்சியாளர்கள் அறிந்திலர்போலும்.

திருத்தொண்டர் திருநாள்

## அரசு துறந்து அரனடி பணிந்த ஐயடிகள் காடவர் கோனாயனார்

### 24—10—52-ல் குருபூசைத் தினம்

பல்லவர்குலத்திலே தோன்றி காஞ்சிபுரத்திலே சைவத் திருநெறிப்படி அரசாண்டு வந்தார் ஐயடிகள்காடவர் கோனாயனார். அவர் பிறதேசங்களைத் தமக்குக் கீழாக்கிச் சைவ சமயந் தழைத்தோங்குமாறு எவ்வுயிரும் இன்புற்றுவாழ ஏனைய அரசர்கள் பணிந்தமைய அரசாளுங் காலத்திலே அரசாட்சி துன்பமெனக் கருதி அரசபாரத்தைப் புத்திரன்மீதமர்த்திவிட்டுத் திருத்தொண்டு செய்தலை மேற்கொண்டார்.

மன்னவரும் பணிசெய்ய
வடநூல்தென் றமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப்
பாரளிப்பார் "அரசாட்சி
இன்னல்"என இகழ்ந்ததனை
எழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு
நயந்தளிப்பாராயினர்.

அவர் ஆலயங்கள் தோறும் சென்று வழிபட்டுத் திருத்தொண்டு செய்து ஒவ்வொரு வெண்பாப் பாடுவாராயினர். அன்னவர் மிகுந்த காதலினால் வழிபாடாற்றிச் சிதம்பரத்தையடைந்து நடராசப் பெருமானைத் தரிசித்து வணங்கி வெண்பாப் பாடினார்.

பெருத்தெழுகா தலில்வணங்கிப்
பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல்
புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து
நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின்
வெண்பாமென் மலர்புனைந்தார்.

அவ்வாறு வழிபட்டுத் திருவருள பெற்று மற்றுந் திருக்கோயில்களுக்குஞ் சென்று வணங்கித் திருத்தொண்டு செய்து இனிய வெண்பாக்கள் பாடுவாராயினர். இவ்வாறு பலகாலம் திருத்தொண்டு செய்து வாழ்ந்து சிவலோகத்தையடைந்து சிவபதம் பெற்றார்.

இந்நெறியால் அரனடியார்
இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின்
பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து
வழிஅன்பர் மருங்கணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக்
காடவரை அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தனஹூ ஐப்பசிமீ அஉ வெள்ளிக்கிழமை

## கந்தர் சட்டிச் சிந்தனை

அருவமும் உருவமாகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்
பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன வந்தாங்
குதித்தனன உலகம்உய்ய

ஐப்பசித் திங்கள் வளர்பிறை ஆறு நாட்களும் சரவணப் பொய்கையிற் றோன்றிய அறுமுகப் பெருமானை மனம் மொழி மெய்யால் வழிபடுவதற்குகந்தகாலம் என்பது சைவ நூற்றுணிபு. உலகமுய்ய உதித்த திருமுருகனைக் கந்தசட்டித் திருநாட்களில் உலகுளார் உள்ளத்தமைத்து வாயால் வாழ்த்திச் சென்னியாற்றாழ்ந்து போற்றின் அன்னவர் ஈடேறுவர் எனக. இப்புண்ணிய புனித காலத்தில் விரதமிருந்து முருகன் வழிபாடு செய்தல் முறையென விதிகளுண்டு. உண்ணுதிருத்தலே விரதம் என்றறிஞர்கள் எண்ணார்! ஐம்புல நுகர்ச்சியை அகற்றி மன வமைதி கொள்ளலே விரதமென்க. எப்பொழுதும் எவ்விடத்தும் புலன்களின் வழிப் போய்க்கொண்டிருக்கும் மக்கள் ஐம்புல ஒடுக்கம் செய்தல் என்றால் இயலாத காரியமென்றே சொல்ல வேண்டும். எனவே இயன்றவரை புலன்களை மறுக்க வேண்டுமென்பதும் அதற்குச்சாதனமாக ஆலயந் தொழுது அரனடி வணங்கி அவன் புகழ்பாடி புராணங் கேட்டுப் புனிதராயிருத்தல் வேண்டும் என்பதும்பெறப்படும். அறநெறி ஒழுக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய வெலாம் ஒருங்கு'. பற்றற்ற பதியிடததுககதிபுக வேண்டுவதற்கு மக்கள் எல்லாப் பற்றையும் தவிர்த்து இறைபால் வைக்கும் பற்றொன்றையே கொள்ளல் வேண்டும் என்றார் வள்ளுவனார்.

விரத முறைகளைப்பற்றி விரித்துரைக்க நரம் இவ்விடத்தெண்ணவில்லை. இவ்வுலகில் இக் காலத்தில் உள்ள இடர்களுக்கெல்லாம் காரணமாயிருக்கின்ற மயக்கத்தைப் போக்க வல்லது கடவுள் வழிபாடேயென்று அரசியல வாதிகளே கூறுகின்றார்கள் என்றால் இப்போதைய வாழ்வில் விரதத்தின் தத்துவம் எத்துணைச் சத்தி வாய்ந்திருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அமைதியின்மை தாண்டவமாடுகின்ற இவ்வுலகில் அமைதியைக் கொண்டுவரக்கூடிய சத்தி எது? அன்று சூரன் முதலாயினோர் அமைதியின்மையை ஆக்கி அமரர்களை வருத்தி அசுரவரசை நிலைநாட்டத் துணிந்தனர். மாயையின் கோலமே அமைதியின்மை. அதை நீக்கச் சோதிப் பிழம்பிற்றோன்றி அருவமு முருவமுமானார் அப் பெருமான். அமைதி நிலவியது.

இன்று உலகியலில் எங்கணும் சூரர்கள் பல்லாயிரவர்கள் நடமாடுகின்றார்கள். துட்ட பரிபாலனம் செய்கின்றார்கள். மக்கள் மன நிலை இங்கோடங்கோடும் வண்ணமாகியிருக்கின்றது. நீதி அநீதி என்ற பாகுபாட்டையறிய முடியாதவர்களாய் மயக்குண்டு வீண்பொழுது போக்குகின்றார்கள். இப்பொழுது உலகமுய்ய முருகன் கருணை வேண்டும். கருணையைப் பெறக் கந்தன் கழலிணை பணிதல் வேண்டும். பணிந்து இறை நிழலில் இளைப்பாறுதல் வேண்டும்.

வாழ்க்கை சீரடைவதற்கு வேண்டப்படுவது ஒழுக்கநெறி. விதிக்கப்பட்டன விலக்கப்பட்டன என்றவை எவையென் றறிதலும் விலக்கப்பட்டவற்றை ஒழித்துவிதிக்கப்பட்டாங்கு ஒழுகி விமலன்றாளை மனம் மொழி மெய்யால் வழிபடுதலே விரதம் என்க.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்தபடி யிருங்
கோளெழு பாரு முய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோனருள் வந்து தானே
உமக்கு வெளிப்படுமே!

வாழக் கருதுகின்றார் யாவரும், கந்தனைச் சிந்தியுங்கள்! சேவற் கொடியானைச் சேவியுங்கள் — வள்ளிபங்களை வந்தியுங்கள் மயில்வாகனனை வாழ்த்துங்கள் யான்றான் எனுஞ் சொல்லிரண்டுங் கெடப் பழகுங்கள், சத்தியத்தின் மகிமையை அறியுங்கள— உலகம் உய்யும் ஐயமில்லை.

---

### ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின்
## வாழ்க்கை வரலாறு

கொழும்பு மெய்கண்டான் அச்சு நிலையத்தாரால் அடிகளின் இலங்கை வருகைக்குறிப்பாக வெளியிட்ட அன்பளிப்பு வெளியீடு. இது அடிகளின் சரித்திரச் சுருக்கத்தை அவரது அழகிய திருவுருவப் படத்துடன் தந்து மிளிர்கின்றது. அன்பளிப்பாய் வழங்கும்படி எமக்கனுப்பிய பிரதிகள் பெற்றும.

பிரதிகள வேண்டுவோர் சேரிற் பெறலாகுமென்று அவர்கள் அறியத் தருகின்றார்கள்.

# சத்தி மைந்தன்
# ஸ்ரீசுத்தானந்தயோகி

## வாழ்க்கைச் சித்திரம்

### பிறப்பு:

நமது சுவாமிகள் ஹேவிளம்பி வருஷம் சித்திரை மாதம் முப்பத்தோராந் தேதி (11-5-1897) புதன்கிழமையன்று உத்தர நட்சத்திரத்தில் சிவகங்கையில் அவதரித்தார்.

### பெற்றார்:

இவரது தாயார் தேவி கமலாட்சி அம்மையார்; தந்தையார் பக்தியோகி ஜடாதார்.

### திருநாமம்:

இவரது பிள்ளைத் திருநாமம் வேங்கட சுப்பிரமணியம். வேங்கடேசப் பெருமான் அருளும், முருகன் அருளும் சேர்ந்து அவதரித்தாரென்று இவருக்கு இத் திருநாமத்தைச் சூட்டினர். இவரது ஞான குரு சூட்டிய தீக்ஷா நாமமே 'சுத்தானந்தம்' ஆகும்.

### வடிவம்:

குழந்தையிலேயே அழகும், அருளும் அமைந்து, முகத்தில் அறிவு ஒளி வீச, இன்ப வடிவாய்த் திகழ்ந்தார், நமது சுத்தானந்தர்.

### அன்னை பராசக்தியின் மகன்:

இவருக்கு ஐந்து வயதான போது மதுரையிலுள்ள லக்ஷப் பிரபுவான தமது மாமனார் வீட்டிற்குச் செலல நேர்ந்தது. மாமனார் தமது சகல செல்வங்களையுங் காட்டி, "நீ எனக்குத் தத்துப் பிள்ளையாக வந்தால் இவையனைத்

கொழும்பு, மெய்கண்டான்
திரு. ஆ. கதஜையா

தும் உனக்கே உரியவையாகும்" என்றார். அதற்கு இவர், "நான் அன்னை பராசக்தியின் மகன்; யாருக்கும் நான் தத்துப் பிள்ளையாக முடியாது" என்றார். "அப்படியாயின உடனே வெளியேறு" என்றார் மாமனார்.

### அன்னையின் அருள்:

அக்கணமே இவர் வெளியேறி நேரே கோவிலுக்குச் சென்றார். அழுதார்; அசைவற்றுக் கிடந்தார் அன்னை மீனாட்சியின் அருட்பார்வை கிட்டியது. "அம்மா பரதே விதயா பரியே" என்று தொடங்கிச் சிறு பாடல் ஒன்று பாடினார்.

### அருட்கவி:

நாவில் கலைவாணி குடிகொண்டு விட்டாள். உள்ளத்திலிருந்து அருட்கவியூற்று 'வற்றாத இனிய தமிழ் ஊற்றெ'னக் கொப்பளித்துக் காவியக் கங்கையாகப் பெருகத் தொடங்கிவிட்டது. உள்ளத் துறவு பூண்டார்.

### எங்கணும் அருள் விளக்கம்:

அனுபவ முதிர்ச்சியும், தமிழ் அறிவும்பெற வசதிகள் பல கிடைத்தன. தந்தையிடமிருந்து திருக்குறளின் மேன்மையையும் கம்பன் கவி இன்பத்தையும் நுகர்ந்து மகிழ்ந்தார். இவரது பாட்டனார் யோகாசனங்களில் சிலவற்றை இவ[illegible] திருமந்திர உபதேசம் செய்து 'ஆதார ரகசியங்களை'யும் விளக்கினார். அவரே இவருக்கு ஞானத் தந்தையாகி 'சுத்தானந்தன்' என்னும் திருநாமத்தையும் சூட்டினார். 'ஓம் சுத்த சக்தி' என்னும் மந்திரமும் ஒன்றிவிட்டது. எதிலும் அன்னை பராசக்தியின் அருள் விளக்கத்தையே கண்டார்.

### தமிழ் ஆர்வம் தமிழ்ப் பணி:

"அமுதே அழகே அருளே அன்பே தன்னிக ரில்லா நன்மொழித் தமிழே..............................
வானுற ஓங்கி வாழ்க நின் பெருமை" எனறு பாடித் தமிழ் மொழிக்குப் பெருமை செய்ய முற்பட்டார். தமிழ் ஆர்வம் கொண்டார். அன்று முதல் ஓயாது தமிழ்ப் பணி புரிந்து வருகிறார்.

### பயப்படாதிரு மனமே:

தெய்வசிகாமணிப் புலவரிடம் பாடம் கேட்டார். யாப்பிலக்கணத்தையும் வேதாந்த சித்தாந்த நூல்களையும் கற்றுக்கொண்டார். பல கீர்த்தனங்கள் புனைந்தார். தாம் புனைந்த கீர்த்தனங்களுக்கு 'சங்கீத சாகரம்' எனப் பெயரிட்டார்.

சிவகங்கையில் உயர்தரப் பள்ளியில் தமது வகுப்பு உபாத்தியாயரிடம் ஒப்புவிக்க வேண்டிய பாடலொன்றுக்குப் பதிலாகத் தாம் இயற்றிய பாடலொன்றைப் பாடினார் இதன் விளைவாகச் 'சங்கீத சாகரத்தை' அக்கினிதேவனுக்கு இரையாக்கினர். அக்கினிதேவன் சுவைக்காது விடுத்த பகுதியொன்றில் 'பயப்படாதிரு மனமே' என்னும் பாட்டு வரியினைக் கண்டு மன உறுதி கொண்டார்.

### ஆங்கிலக் கல்வி:

நமது கவியோகி ஆங்கிலம் பயின்றார். ஷேக்ஸ்பியரின் நூல்களை உணர்ச்சியுடன் படித்தார். கவி இன்பத்தில் திளைத்தார்.

### தாயெனக் காட்சிதரும் பெண்:

"தாயெனக் காட்சிதரும் பெண்ணை மனைவியாகக் கொள்வேன்" என்று மணஞ் செய்துகொள்ளாத மன வைராக்கிய உறுதி கொண்டார். இது சம்பந்தமாக, இவர் தமது தமையனுருக்கு எழுதிய 'சாந்தன் துறவு' என்னும் கடிதம் இவரது 'பெரியார் வரலாறு' என்னும் நூலில் காணலாகும்.

### பள்ளியில் ஆசிரியர்

ஆங்கிலத்தில் பட்டம் பெற்றார். சிவகங்கை உயர்தரப் பள்ளியில ஆசிரியரானார், பல கவிதைகள் புனைந்தார். கட்டுரைகள் எழுதினார்.

### தொண்டு

இறைவனிடம் மனத்தைப் பதித்தார். தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பெரும் பணியாற்ற முற்பட்டார், கிராமங்களில் ஏழைகட்கு எழுத்தறிவித்தார், ஜாதிமத வேறுபாட்டை ஒழிக்க முற்பட்டார். கிறிஸ்துமத உண்மைகளை ஆராய்ந்தார். ஏசுவின் நாடகத்தை எழுதித் தாமே ஏசுவாகவும் நடித்தார். முகம்மதிய மதத்தத்துவங்களையும் ஆராய்ந்தார், நபிநாயகத்தின் வரலாற்றையும் குர்-ஆனின் சாரத்தையும் செய்யுளாகச் செய்தார். திருச்சியில் காந்தி மகாத்மாவைக் கண்டார், அவரது சாந்த வழியே உலகிற்குச் சிறந்த வழியெனக்கண்டார் கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழித்தல் முதலியவற்றில் தீவிரமாக ஈடுபட்டார்.

'பால பாரதி'யில் தொண்டாற்றினார். 'சமரச போதினி'க்கு ஆசிரியரானார். 'தொழிற் கல்வி' என்னும் பத்திரிகையைப் பதிப்பித்தார். சில நாட்கள் சமண மதத்தை ஆராய்ந்தார். சென்னை 'ஸ்வராஜ்யா' என்னும் பத்திரிகைகு ஆசிரியரானார். காந்தீயத்தில் தீவிரமாக ஈடுபட்டார். ஸ்ரீ ரமண மகரிஷியின் தரிசனமும் பெற்றார். பின் புதுவையில் அரவிந்தாசிரமம் அடைந்தார். மஹாயோகி அரவிந்தரைக் கண்டார். ஈட்டிய பொருளெல்லாம் ஆச்சிரமத்திற்கே தந்தார் அரவிந்தாச்சிரமத்தையே உறைவிடமாகக் கொண்டு தமிழுக்கும் தமிழுலகிற்கும் இணையற்ற பணி புரிகின்றார். 1952 மேமீ முதல் மலாயா சிங்கப்பூர். சீயம், ஜப்பான் முதலிய நாடுகளில் அறப் பிரசாரம் செய்து இலங்கைக்கு வந்துள்ளார், இன்று 20-10-52 முதல் 30-11-52 வரை இலங்கை மக்களுக்கு உபதேசம் செய்து தாய்நாடு திரும்புவார். நாம் அனைவரும் சுவாமிகளைத் தரிசித்து, உபதேசங்களைக் கேட்டு அவற்றின்வழி நின்று உய்வோமாக.

வாழ்க கவியோகி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

---

## யோகி
## ஸ்ரீசுத்தானந்தர்

### இலங்கையிற் சுற்றுப்பிரயாணம்

=o=

26—10—52 காலை 8 மணிவரை கண்டி செல்லுதல் மாலை 6 மணியளவில் அங்கு வரவேற்பு.

27-10-52 தொடக்கம் 3-11-52 வரையில: கண்டி, கம்பளை, ஹற்றன், நாவலப்பிட்டி, புண்டுலோயா, நுவரெலியா, பண்டாரவளை, வதுளைமுதலாய இடங்களில் வரவேற்புகள்.

4-11-52 மாலை 5½ கொழும்பு Y. M. B. A பிரசங்கம்,
8.00 பாணந்துறை வரவேற்பு.

5-11-52 — 6-11-52 கதிர்காம யாத்திரை. 6-11-52 மாலை திரும்பும்போது மாத்தறையிலும் காலியிலும் வரவேற்புக் கூட்டங்கள்.

7-11-52 காலை 7-30 களுத்துறையில் கூட்டம். பினனோம்: குலியப்பிட்டியா போய், அவ்விருந்து குருநாக்கல் மார்க்கம் மட்டக்களப்புக்குச் செல்லுதல்

8-11-52 காலை 7-40 மட்டக்களப்பு ஊர்வலமும் வரவேற்பும். மாலை 6 சிவானந்தர் வித்தியாசாலை பரிசளிப்பு

9-11-52 — 12-11-52 மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, வாழைச்சேனை முதலாய இடங்களில்.

13-11-52 — 15-11-52 பொலநறுவை, திருக்கோணமலை.

16-11-25 சிகிரியா, மாத்தளை, டம்பூலா, கெக்குறுவை,

17-11-52 அநுராசபுரம்,

18-11-52 திருக்கேதீச்சரம், வவனியா, கிளிநொச்சி.

19-11-55 — 2—12—52 வரை யாழ்ப்பாணப் பிரிவில்:

---

நூறு புது உபதபால் நிலையங்கள் இவ்வாண்டு திறக்கப் படுமென அறிய வருகின்றது.

x x x

திரு. நடேசன் அவர்களுடைய தேர்தல் ஆட்சேபனை வழக்கில் திருத்தஞ் செய்ய உயர்நீதி மன்றம் அனுமதி கொடுத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக வாழ்க்கையை ஆக்குங்கள்!

### புதுவை யோகிகளின் பொன்மொழிகள்

**கொழும்பு நகரசபை**

கொழும்பு நகர மண்டபத்தில் திங்கட்கிழமை(20-10-52) மாலை கொழும்பு நகரசபைத் தலைவரும் நகரசபையாரும் பாரதியாருக்கு வரவேற்புபசாரஞ் செய்தனர். அவ்வமயம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகவும் சமுகமாயிருந்தார்.

அத்தியந்த அன்புடன் வரவேற்கிறோம், உலகம் துன்பப் புடலிலும் ஏமாற்றச் சுழியிலும் சிக்கி அல்லலுறும் இந்நேரத்தில் தங்கள் ஆன்மார்த்தத் தூது மிகப் பொருத்தமுடையது. அன்று இந்திய விடுதலைப் போரிற் பங்குபற்றிய நீங்கள் இன்று ஆன்ம விடுதலைப்போர் தொடுத்திருக்கிறீர்கள் என்று இன்னபல இன்னுரைகளால் கொழும்பு நகரசபையார் வரவேற்றனர்.

வனப்பு மிக்க இலங்கை மக்களிடையே தங்கி மகிழுகிறேன். விஞ்ஞானம் மிகுந்த இவ்வுலகில் விஞ்ஞானத்துடன் ஆத்மசக்தி இணைந்தால் உலக சமாதானம் உண்டாகிவிடும். சமாதான தூதர்களை உலகெங்கணுமனுப்பி மக்களை ஆத்மீக வாழ்க்கைக்கு ஆக்கவேண்டும். தியானத்தால் உயர்ந்தநிலையை எய்தலாம். ஒவ்வொருவரும் நாள்தோறும் 10 அல்லது 15 நிமிஷங்களுக்காயினும் தியானஞ் செய்யவேண்டும். தீவிர ஆசையை ஒழிக்கவேண்டும் என்பனவும் பிறவுமாய அறிவுரைகளால் எழில்நெறி காட்டினர் யோகிகள்.

**கொழும்பு மக்கள்**

கொழும்பு நகர மண்டபத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் கொழும்பு மக்கள் யாவரும் சுவாமிகளை வரவேற்றனர்.

தங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்று மகிழுகின்றோம். குழப்பமும் கவலையும் தாண்டவமாடும் தற்போதைய உலகில் உன்னதமான மௌன விரதத்தை எங்களுக்கு உபதேசித்திருக்கின்றீர்கள். உங்கள் தரிசனத்தால் பராசக்தியின் இன்னருள் எங்களுக்குக் கிடைக்கும் என்று இன்ன பிறவுரைகளால் வாழ்த்தி வரவேற்றனர் கொழும்பு மக்கள்.

உடலும் ஆத்மீக உணர்வும் இணைந்திருப்பது யோகம் எனப்படும். யோக சாதனை வாழ்க்கையில் வரும் துன்பங்களுக்கு அருமருந்தாகும். தெய்வீக உணர்ச்சி உந்த மக்களின் கூட்டு வாழ்க்கை அமைத்தல் அகில உலகுக்கும் பொதுவான யோக சாதனையாகும். இத்தகைய யோகமே இன்று வேண்டப்படுவது. இதுவே என் வாழ்க்கையின் இலட்சியம். எவ்வித பேதமும் இல்லா இந்த யோக சாதனையால் யாவரும் இன்புற்று வாழலாம்.

வேதாந்தம், சித்தாந்தம், இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம் ஆகிய ஐந்தும் மனிதனுக்கு அவசியமானவை, இருதயத்தில் புத்தரையும், செயலில் கிறிஸ்துவையும், பிரார்த்தனையில் இஸ்லாத்தையும், தியானத்தில் வேதாந்தத்தையும் வாழ்க்கையில் சித்தாந்தத்தையும் வையுங்கள். கடவுளின் வீடாகிய இந்த உலகத்திலே சுயநல அகந்தை பல பிளவுகளை விளைவிக்கின்றது. அகந்தை அகற்ற அன்பொளிவீசும் கோயிலாய் உலகம் மாறும். எல்லாவற்றையும் ஐக்கியப்படுத்தும் சுத்த சத்தியொன்றுண்டு. ஒன்றுபட்ட மௌன தியானத்தினால் மாத்திரம் அதை உணரலாம்.

ஒவ்வொரு ஆன்மாவும் ஓரே பதியின் பலவேறு தோற்றங்கள். ஆன்மாவானது கடவுளின் கருணையாகிய விமானத்தில் ஏறி நம்பிக்கையுடன் தன்னை ஒப்படைத்துத் தியானத்தில் அமரவேண்டும். பிரயாணிகளே வாருங்கள், யாத்திரீகர்களே வாருங்கள்; கோயில் திறந்திருக்கின்றது. கோயில் திறந்திருக்கின்றது. ஒரே எண்ணத்துடன் ஐக்கியமாய் முன்னேறி வெற்றி பெறுங்கள் என்பனவாய பல உறுதிமொழிகள் மொழிந்து ஒளிநெறி காட்டினர் சுத்தானந்த அடிகள்.

**கொழும்பு நூதனசாலை**

செவ்வாய்க்கிழமை (21-0-52) மாலை கொழும்பு நூதனசாலை மண்டபத்தில் சுத்தானந்த அடிகள் பேசினார். தமிழ் மொழியானது அளவிறந்த அன்புச் சக்தி வாய்ந்தது. தமிழ்மொழி பயில்வோர் உள்ளத்தில் அன்பு தானாகவே ததும்பும். இத்தகைய அன்புள்ளோர் உள்ள நாட்டில் சமாதானம் நிலவும். எனவே தமிழ்மொழி அகில உலக மொழியாக வளருமானால் அகில உலக சமாதானம் இனிது உருவாகும். இத்தகைய மொழியைப் பரப்புவதற்கு நாம் முயற்சி செய்யவில்லை. ஜப்பான் முதலிய கிழக்குத் தேசங்களிலுள்ள சர்வகலாசாலைகளிலேயே தமிழ் நூல்கள் இல்லாதிருப்பது மிகவும் வருந்தவேண்டியது.

தமிழ்மொழியின் கருவூலமாய்த் திருக்குறளமைந்திருக்கின்றது. இது உலகிலுள்ள மதங்களெல்லாம் தரும் உட்பொருள்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இத்தகைய உயர்ந்த நூலை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும் என்று அடிகள் அறிவுரைகள் கூறி உறுதிநெறி காட்டினர்கள்.

**வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடம்**

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்தில் சுவாமி அழுகானந்தா அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் யோகிகள் பேசும்பொழுது இன்றைய உலகம் இருட்டிரையால் மூடப்பட்டிருத்தலின் மனிதன் அறிவிழந்தவனாய் அல்லற்படுகிறான். இது ஆன்மார்த்த பரிசுத்தத்தால் நீக்கப்படுதல் வேண்டும் என்று கூறினர்.

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

கொழும்பு தமிழ்ச் சங்கத்திற் பேசும்பொழுது உபநிடதம் திருக்குறள் ஆகியவற்றின் பொருள் கம்பராமாயணத்திலுங் காணக்கிடக்கின்றதென்றும், கம்பராமாயணம் சொல்நயம் பொருள்நயம் செறிந்த கற்பனைக்கதிர் பரப்பும் நூலாகியிருக்கிறதென்றும் பெண்களின் கற்பும் ஆண்களின் வீரமும் இந்நூலிற் பெரும் இடம் பெறுகின்றன வென்றும் இந்நூலின் பலதிறச் சிறப்புக்களை எடுத்துக் காட்டிப் பல அறிவுரைகளைப் பாரதியார் கூறினர்.

# இலங்கை வானொலி

## நேயர் விமர்சனப்போட்டி

ஜூலை மாசத்தில் இரண்டாவது வாரத்தில், ரேடியோ சிலோன், நேயர்கள் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்தது. ஜூலை மாதம் 14-ம் திகதியிலிருந்து ஒரு வாரத்து நிகழ்ச்சிகளைக் கேட்டு, அவற்றைப் பற்றிய விமர்சனங்களில் சிறந்தவருக்கு முதற்பரிசு ரூபா 200 உம் சன்மானப் பரிசுகளாக நான்கு பேருக்கு ரூபா 25 வீதமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இதுவரை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்த சில விபரங்களை, இந்த விமர்சனங்களிலிருந்து பெறக் கூடியதாக இருந்தது. கிடைத்தவிமர்சனங்களின் தொகை சுமார் 1000 வரையிலிருக்கும். இவற்றிலிருந்து கிடைத்த விபரங்கள் கலப்பற்றவை என்று கூறமுடியாத போதிலும், நேயர்களின் விருப்பங்களையும் விமர்சனங்களையும் எடுத்துக் காட்டுவனவாயிருக்கின்றன.

தமிழ் நிகழ்ச்சிகளைக் குறித்து, சில கண்டனங்கள் செய்யப்பட்ட போதிலும், மொத்தமாக இப்போதைய தமிழ் நிகழ்ச்சிகளைக் குறித்து நேயர்கள் திருப்தியடைந்திருக்கிறார்கள். கிராம நிகழ்ச்சிகள், நாடகங்கள், விவேகச் சக்கரம், சங்கீத நிகழ்ச்சிகள் என்பன வெகுவாகப் புகழப்பட்டிருக்கின்றன. காலையில், செய்திகளும் அறிவிப்புகளும் என்ற நிகழ்ச்சி சேர்க்கப்பட்டது பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

நேயர் விருப்பம் என்ற நிகழ்ச்சிக்கு இன்னும் கூடியநேரம் கொடுக்கப்படவேண்டுமென்று பல நேயர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால், காலை இசை, இஸ்லாமிய கீத நிகழ்ச்சி, செய்தி அறிவிப்பு என்பன கடுமையான கண்டனத்துக்கு இலக்காகியிருக்கின்றன. பல நேயர்கள், சமய சம்பந்தமான ஒலிபரப்புகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நேரம், மிக அதிகமாக இருக்கிறது என்றும் முறையிட்டிருக்கின்றார்கள்.

கல்வி ஒலிபரப்பு நேயர் போட்டியின் முடிவுகள் மிக ஏமாற்றத்தை அளிப்பனவாக இருக்கின்றன. இதற்குக் காரணம், இப்போட்டிக்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளே. இவற்றின்படி, எந்த மாணவனோ, ஆசிரியனோ (இளைப்பாறினவர்களைத் தவிர) தொடர்ந்து கல்வி ஒலிபரப்பைப் போட்டி வாரத்தில் கேட்க முடியாது. பெரும்பாலான [illegible]கள், பாடசாலைகளில் கல்வி ஒலிபரப்பைக் கேட்கக் கூடிய வசதிகள் செய்யப்படவில்லை என்று முறையிட்டுள்ளன.

இப்போட்டியின் மூலம் கிடைத்த விபரங்கள், நேயர்களின் விருப்பங்களை எடுத்துக் காட்டினவேதவிர, அபிப்பிராயங்களைப் பற்றிய உண்மைத் தகவல்களைத் தருவனவல்ல என்பதை வற்புறுத்த வேண்டும், இருந்தபோதிலும், நிகழ்ச்சித் தெளிவு, வீட்டிலே நிகழ்ச்சிகளைக் கேட்போரின் எண்ணிக்கை, நேயர்களின் மதப்பிரிவுகள் வயது முதலியவை குறித்து, உபயோகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

நேயர்களுடைய விருப்பங்களைப் பற்றிய வெறும் ஆராய்ச்சிகள், காலத்துக்குக் காலம் செய்யப்படும். நேயர்களுக்குச் சிறந்த சேவை செய்யவேண்டும், அதற்கு அனுகூலமான தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்பதே இந்த இலாகாவின் நோக்கம்.

பரிசு பெற்றவர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

**தமிழ் முதற் பரிசு:**

கே. கைலாசபதி, 29, 42வது லேன், வெள்ளவத்தை. எஸ். நடராஜா, ஆர். ஆர். ஐ, அகலவத்தை

**சன்மானப் பரிசுகள் நான்கு:**

செல்விபத்மா பஞ்சநதேஸ்வரன் 39, ஓட்டுமடம் ரோட், யாழ்ப்பாணம். என்.எம். முஸ்தபா மௌலானா, குட்டிக்காச்சி, கின்னியா, தி. மா. கே. வைரமுத்து, C/o வி. எஸ். முருகானந்தன், 610, புளுமண்டல்ரோட், கொட்டாஞ்சேனை. பி. வ. ஜி. திருராஜா, 101. கந்தவத்தை ரோட், காலி.

**கல்வி ஒலிபரப்பு முதற் பரிசு:**

சகோதரி மேரி. ஜோஸெபைன், ஆசிரியை, பரிசுத்தகன்னியாஸ்திரிமடம், யாழ்ப்பாணம்

**சன்மானப்பரிசுகள் நான்கு:**

எஸ். கே. அரசரத்தினம், ஆசிரியர், அரசினர் பாடசாலை, பரணகமா, மாவனல்லை.

எஸ். எஸ். எம். ஜிவ்றி, அரசினர் தமிழ்ப் பாடசாலை, குடாப்பிட்டியா, அக்குறனை.

வ. ஐயாத்துரை, உயன்வத்தை அரசினர் தமிழ்ப் பாடசாலை, மாவனல்லை.

பி. எஸ். குறிப்பு ஆராய்ச்சி, ரத்சம பாடசாலை, காலெல்லா.

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 26—10—52——1—11—52**

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இது தளம்புந்தன்மையான வாரமாயிருக்கின்றது. குடும்பத் தொந்தரவுகளும் நண்பருடன் பிழையான எண்ணங்களுக்குமிடமுண்டு. புதிய முயற்சிகளைப் பின்போடுக. வார இறுதி நல்ல புதினம் தரும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் போட்டியிடுவோரை வெல்லக்கூடியதாயிருக்கும் ஆனால் சிறு உத்தியோகத்தொந்தரவுக்கிடமுண்டு. புதுமுயற்சிகள் கவனமாய்க் கையாளவேண்டும். சிறு ஆபத்துக்கள் அல்லது சுகவீனத்துக்கிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

முதல் இரு நாட்களும் இந்த வாரம் அதிகம் தடுமாற்றமடையச் செய்தல்கூடும். குடும்ப விஷயங்களிற கஷ்டங்களும் இரகசியப் பகைவரால் தொந்தரவுகளும் உண்டாகக்கூடும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் சண்டை தொடக்க விலகிச் செல்வீர். சில நம்பிக்கையான உறவினர் கடைசிநேரத்திற கைவிடக்கூடும். செவ்வாயும் புதனும் எல்லாவற்றிலும் [illegible] நாட்களாகும். வார[illegible] அரைப்பங்கு திருத்தமானதாகும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இந்தவாரம் உமது செல்வாக்கால் அதிக சித்திபெறக்கூடியதாயிருக்கும். புகழும் சித்தியும் நிச்சயம். புதன் பிற்பகல், வியாழன் வெள்ளி தேகசுகக்குழப்பத்துக்கிடமுண்டு. வாரஇறுதி திரும்பவும் நன்மையாகின்றது.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் குடும்பத் தொந்தரவுகளுக்கிடமுண்டு. பிழை எண்ணங்களைத் தவிர்ப்பதிற் கஷ்டம் ஏற்படும். உமது திறமான எண்ணங்களும் மற்றவர்களை நம்பச் செய்யமாட்டா, வாரஇறுதி அதிக தடுமாற்றம் விளைக்கும்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் தேகசுகத்தில் விசேஷகவனம்செலுத்தவேண்டும். சிறு உத்தியோகத் தொந்தரவுகள் உண்டாகக்கூடும். ஆனால் அதிகம் பிழையான விளைவுக்கிடமில்லை. புது முயற்சிகளைப் பின்போடவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்த வாரம் குடும்பத்தொந்தரவுகளுக்கிடமுண்டு. கவனமாயிரு[illegible] றிலும் கவனமாயிருக்கவும்,

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

உத்தியோக அல்லது வியாபார முயற்சிகளுக்கு நல்லவாரம். ஆனால் சொந்தச் சிக்கல்கள் நீங்கமாட்டா, நண்பருடன் பிழை எண்ணத்துக்கும் வாழ்க்கைத்துணைவரின் இனத்தவருடன் தொந்தரவுக்குமிடமுண்டு.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் நண்பர் அதிக உதவி செய்வர். புது முயற்சிகள் விரும்பியநன்மைதரும். வாரஇறுதிக்கு முன் ஒரு இட மாற்றத்துக்கு அல்லதுபிரயாணத்துக் கிடமுண்டு

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம் உத்தியோக முயற்சிகளிலும் திருத்தத்துக்கிடமுண்டு புதுமுயற்சிகள் விரும்பிய நன்மைகளைத் தரும். வாரஇறுதியில் இரகசியப்பகைவர் கோபமுண்டாக்குவர்

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

மனச்சலனத்துக்கும் சிறிது உத்தியோகத் தொந்தரவுக்கும் இடமுண்டு. புதுமுயற்சிகளைக் கவனமாய்க் கையாளவும். உமமுடைய காரியங்களில் பிறர்பெரும் உதவி செய்வர். வார இறுதியில் நண்பருக்குதவி செய்ய எல்லைகடந்திடவேண்டாம்,

## செய்தித் திரட்டு

=0=

x x x

ஐம்பது சதம், இருபத்தைந்து சதத்துடன் பத்துச் சத நோட்டுகளும் வெளியாகின்றன.

x x x

உணவு உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு அரசாங்கம் 47 இயந்திரக் கலப்பைகளை வடபகுதிக்கு வழங்குகின்றது.

x x x

நீர்கொழும்பு, கொச்சிக்கடையைச் சேர்ந்த வெலிஹேனை என்ற இடத்தில் ஓர் அனாதை விடுதியொன்று திறக்கப்பட்டிருக்கிறதாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழிமூலம் கல்வி கற்பித்தல் ஆகாதா?

"சோமன்"

அன்றொருநாள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றில் ஆங்கிலேயர் ஒருவர் கர்நாடகசங்கீதத்தின் நுட்பங்களைவிளக்கினர். பாடினர் கச்சேரிமுடிந்தது. போகும்போது ஒரு சுதேசி அவரை வழிமறித்து மேல் நாட்டுச்சங்கீதத்தின் நுணுக்கங்களோடு ஒப்பிட்டால் கர்நாடக சங்கீதம் மிகக் கீழ்த்தரமானதே என வாதமிட்டார். தம் கூற்றுக்கு ஆதாரமாகப் பொப்லி பாதிரியாரைக் காட்டினர். ஆங்கிலேயர் புன்சிரிப்புடன் அதை மறுத்து நமது கலையை ஆதரித்தார். இந்த 'அக்கப்போரை'க் கண்டு ஆச்சரியத்தாலும் வெட்கத்தாலும் ஊமையாகித் தலைகுனிந்தோம். இது நிகழ்ந்தது இருபதாம் நூற்றுண்டின் முற்பாதியின் அஸ்தமன நேரத்திலாகும்.

எந்த இந்தியாவில் 'மக்கோலே' பிரபு தோலிலும் இரத்தத்திலும் இந்தியராகவும், சிந்தனையிலும் பழக்க வழக்கங்களிலும் ஐரோப்பியராகவுமுள்ளவரைச் சிருட்டிக்கத் திட்டமிட்டாரோ அந்த நாட்டினர் வயிற்றுப் பிறந்து, மேல்நாட்டாரின் மதத்துக்கு மாற்றப்பட்டு அவர் நாகரிகமே இருண்ட எம் உலகிற்கு வழிகாட்டும் தீவர்த்தி எனக் கைக்கொண்டு, அவர் கல்வி நடையுடை பாவனைகளைப் பின்பற்றினோரே இத்தகைய நம்ப முடியாத போரில் ஈடுபடுவர் என்று எண்ணினோம். ஆனல் இன்று எம்மவர் இலங்கையின் கல்வியாகிய சகடம் முன் செல்லாதவாறு தடுக்கத் தம்மாலான சகல முயற்சிகளையும் செய்கின்றனர். அவர் தம் நோக்கங்களை ஆராயப்புகுந்தால் எம் வழிகாட்டிகளின் கருத்துக்கள் இவ்வளவு அற்பமான அடிப்படையில் தோன்றினவோ என மனநடுக்கம் ஏற்படுகிறது.

முதலில் இன்று உலாவும் கருத்துக்களைச் சிறிது ஆராய்வாம். அவற்றை வெளியிடுவோர் சமூகத்தின் பெரும்பான்மையோர் எட்டியும் பார்க்க முடியாத உயர் மாடத்தில் ஆட்சி புரிபவர்கள். நாட்டின் அறிவுச்சுடர் மங்கி அணையாமற் காக்கும் தெய்வீக கைங்கரியம் தம் தலையிற் சுமத்தப்பட்டிருக்கிறது என நம்பியிருப்போர். அவர் கூற்றில் பிழையேற்பட முடியுமோ எனப் பொது மக்கள் அணுவளவும் ஐயங்கொள்ளார். ஏன்? கல்வியுலகின் 'பொதுமக்க'ளாகிய சாதாரண ஆசிரியர்களே அவர் கருத்துக்களைக் குரு வாக்கியமெனச் சிரமேற் போற்றுவிடினும், பகுத்தறிவுகொண்டு ஆராய அஞ்சுவர்.

இலங்கையின் பிரதம மந்திரிகளைப் படைக்கும் சிற்பசாலையாய் அர்ச். தோமஸ் கல்லூரி யதிபர் சமீபத்தில் தம் சிந்தனைகளை வெளியிட்டார். தம் கல்லூரிப்பழைய மாணவராகிய நம் முதன்மந்திரியவர்களை முன்வைத்துக் கூறினர். 'இலங்கையர் அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பதே நாட்டில் இன்று நிலவும் கல்வித்திட்டத்தின் நோக்கமெனில் வருகிற வருடம் தொடங்கி, எட்டாம் வகுப்புவரை தாய் மொழி மூலம் கல்வி புகட்டும் திட்டம் அந் நோக்கத்தைச் சிதற அடிக்கும். இலவசக் கல்வித் திட்டத்துள் புகாத கல்லூரிகளில் கற்பவரோ, அன்றேல் வீட்டில் விசேட வசதி அமைத்து விசேட தேர்ச்சி பெறுபவரோ உயர்தரக் கல்வியும் உத்தியோகமும் பெறுவர்; உயர் குலத்தினர் ஆவர். பிறர் பின் தங்கிவிடுவர் கீழ்க் குலத்தினர் ஆகி விடுவர். ஆகவே இதற்குப் பரிகாரம் இருமொழியைத் திறம்படக் கற்பித்தலே. ஆங்கிலத்திலும் நாட்டு மொழிகளுள் ஒன்றிலும் சகல மாணவர்களுக்கும் பூரண அறிவு இருக்கவேண்டும். இதுவே இலங்கையில் சுபிட்சத்துக்கு வழி' இதுவே அவர் கருத்தின் சாரம்:

கடந்தகாலத்தில் துவிபாஷா பாடசாலைகள், துவிபாஷா ஆசிரிய பயிற்சிசாலைகள், உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரம் (எ. எஸ். ஸி) பரீட்சை என்பன தோன்றிச் சில ஆண்டுகளில் மறைந்தன. அவற்றின் சிருஷ்டிகள் இருதோணியில் கால் வைத்தவர்களாய், வௌவால்களாய் வாழ்கின்றனர், இலங்கை மக்கள் அனைவரும் இருமொழிப் புலமை எய்தும் ஆற்றல் உடையரா? நூற்றைம்பது ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆண்ட பின் ஆங்கிலம் அறிந்தோர் தொகை எத்தனை வீதம்? இனி மேல் இன்னொரு மொழி கற்க வேண்டியவர்கள 95 வீதமாவது உளரே. இலங்கைச் சமுதாயம் இரு பிரிவாகும் என்ற ஏக்கம் இன்று மாத்திரம் ஏன் எழுகின்றதோ? இதுவரை இருந்து வந்த பிளவு இனிமேலும் சில காலம் தொடர்ந்து இருந்துவரும். ஆங்கிலம் கற்றோர் கூட்டமும் அன்னாரைப் பின்பற்றும் பணக்காரர் குழுவும் ஆதரிக்கும் சுதந்திரப் பாடசாலைகளே இப்பிளவை இன்னுஞ் சிலகாலம் நீடித்து வைக்க முயலும். ஆனல் தேசியமொழிப் பரவையின் நடுவே இவை எத்தனை காலம் நிமிர்ந்து நிற்குமோ பார்ப்போம்!

சமசந்தர்ப்பம் என்னும் மாயப் பொடி தூவிப் பொதுமக்களை மயக்குதல் தம்சுயநலத்தை மறைக்கச் செய்யும் சதியாகும். சமசந்தர்ப்பம் கிடைக்குமென்ற கருத்தில் ஆங்கிலத்தை அனைவரும் தம் மூளைக்குள் திணித்தாலும் ஒரு சிறு பகுதியினரே சர்வகலாசாலைக் கல்விக்கும் 'சட்டை தொப்பி' உத்தியோகத்துக்கும் உரியவராக முடியும் நம் பல்கலைக் கழக உபவேந்தர் அறிக்கைகளே இதற்குச் சான்று பகரும். நாமும் உயர்ந்த இனத்தில் புகுவோம், என நம்பி நாட்டுமொழியிலும் பூரண அறிவுபெறுது ஆங்கிலமும் கற்க முனைவோரில் பெரும்பான்மையோர் அந்த இனத்திற்கும் உயராது, தம் இனத்திலும் சேர மனமின்றித் திரிசங்கு சுவர்க்கத்தில் ஊசலாடுவர். ஆங்கிலத்தைக் கைவிடுதல்தேசத்துக்கு அழிவு தரும் எனப் பெருங்குரல் எழுப்புபவர் அர்ச். ஜோசையப்பர் கலூரி அதிபராவர். மேல்நாட்டுக் கலை மாத்திரம் பயின்றுரல்லர் அவர். இராமானுஜரும் பக்தியும் பற்றி ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர் எம் பண்பாடு என்னவென்றறிந்திருப்பார். ஆனல் ஆங்கிலம் கற்ற யந்திர நிபுணர்களையும் விஞ்ஞானிகளையும் உற்பத்திசெய்தலே நாட்டின் தேவையென்கிருர். லௌகிக வாதிகளுக்கும் அவருக்கும் கருத்தில் வேற்றுமை காணேம்! கல்வியின் நோக்கம் வயிறுறக்கு வழி காண்பதுதானு? அங்ஙனமாயினும் வயிற்றுக்கு உணவு உற்பத்திசெய்யும் மூக்காற்பங்கு மக்கள் ஆங்கிலம் கற்றல் அவசியமா?

இலங்கையின் முதல்ஆங்கில தேசாதிபதிநோத் பிரபு இலங்கையில் டச்சுக்காரர் பள்ளிகளை அழியவிடாது வளர்க்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி எழுதுகையில், 'கிறிஸ்தவராகிய சுதேசிகள் மீண்டும் சைவர், பௌத்தராஞல் தேசீய அபிலாஷைகள் அதிகரிக்கப் பெறுவர்; நம் ஆட்சிக்குத் தடையாயிருப்பர். ஆகவே பாடசாலைகள் மூலம் அவர்களை ஐரோப்பிய மதத்திலேயே நிலைநிறுத்தல் அரசியலுபாயமாகும்' என்று குறிப்பிட்டாராம். ஆங்கிலம், லத்தீன் மொழிகள் மங்கினுல் தம் மதம் பெருமையுறுது என்ற கருத்து இவர்கட்கு உண்டோ என ஐயம் எழுகிறது.

---

## சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

### 1953 - ம் ஆண்டு தேர்தல் தெரிவுப் பரீட்சை

1953-ம் ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர விரும்பும் மாணவருக்கு அடுத்துவரும் கார்த்திகை௴ 1-ந் உ சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒரு தெரிவுப் பரீட்சை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் கலூரித் தலைவர் கந்தோரில் கொடுக்கப்படும்.

T. M. F. லோங்சுவாமியார்
கல்லூரித் தலைவர்
M, 139 21, 24, 28, 31.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் காரைதீவு மேற்கு அருணசலம் மயில்வாகனம் —வழக்காளி.
இல. 8567.

எதிராக,

1. காரைதீவுமேற்கு கந்தப்பர் வேலுப்பிள்ளை.
2. ஷையூர் பெண் பாறுபதிப் பிள்ளை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 8567 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 195 ௵ கார்த்திகை௴ 18ஂ உ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத் தொகை:— முதல வட்டி ரூபா 753/50ம் ரூ. ா: 750/= க்கு 29-1-1952 தொடக்கம் 6-5-52 வரைக்கும் 100 க்கு 3 வீதமான வட்டியும் அதனமேல முழுத் தொகைக்கும் 100 க்கு 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 191-88 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று களபூமியிறை "தமபன்" பா. கெ. இல. ஆறு (பா. கெ. இல. 6) எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கந்தையாவினுதனம். வடக்கு கந்தப்பர் குழந்தைவேலுவிற்கும் வேலாயுதர் முருகேசுவிற்கு முரிய வாதனைகள். மேற்கு தம்பையா பெண் தங்கம் மாவினுதனம், தெற்கு சின்னத்துரை பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும்.

1952ம்௵ புரட்டாதி௴ 30ம் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M. 141 24—10—52

---

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.

---

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

## சுசீலாவின் காதல்

யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952 -ம் ஆ
மார்கழி ௴ 6 - உ சனிக்கிழமை

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

---

| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ஞணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

### தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

---

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna Jaffna on Friday October 24. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org